இடங்களில் மாணவியர் விடுதி அமைப்பதோடு, வேடவன்பட்டியில் உள்ள மாணவர் விடுதியிலே சுற்றுச்சுவர் இல்லாததால் மிகவும் பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கிறது. ஆகவே, அந்த மாணவர் விடுதிக்கு சுற்றுச்சுவரும், இரண்டு இடங்களில் மாணவியர் விடுதிகளும் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் கேட்ட கேள்வி, பரமத்தி–வேலூர் தொகுதியிலே ஆதி திராவிடர் மாணவர்களுக்காக புதியதாக இரண்டு இடங்களில் மாணவியர் விடுதி கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சொன்ன பதிலையே திரும்பச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் கேட்ட கேள்வி இரண்டு இடங்களிலும் புதிதாக மாணவியர் விடுதி வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்கள் விடுதிதான் கேட்டிருக்கிறாரே தவிர, மாணவியர் விடுதி கேட்கவில்லை. ஏற்கெனவே அந்தத் தொகுதியில் 4 மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அவ்விடுதிகளில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. இந்த நிலையில் மேலும் மாணவர்கள் விடுதி கேட்கின்றார்கள். இதுகுறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

70—

குடமுழுக்கு

***6051—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2017 மார்ச் 22]

(அ) *முசிறி தொகுதி, திருநாராயணபுரம், அருள்மிகு வேதநாராயண பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு, அறிவு, துணிவு, ஆகியவற்றின் அடையாளமாக வாழ்ந்து, கழகக் காவல் தெய்வமாக இருந்து, மறைந்தும் எங்கள் நெஞ்சங்களில் வாழும், மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடன் 32 ஆண்டுகளாக அவருடன் எல்லா நிலையிலும் பணியாற்றிய மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களை வணங்கி என்னுடைய பதிலைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், திருநாராயணபுரத்திலுள்ள அருள்மிகு வேதநாராயண பெருமாள் திருக்கோயில் சுமார் 800 ஆண்டுகள் பழமையான திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் குடமுழுக்கு கடந்த 7–7–2000 அன்று நடைபெற்றுள்ளது. தற்போது 12 ஆண்டுகள் கடந்த நிலையில் தொல்லியல் துறையின் கருத்துரு பெற்று திருப்பணிகளை மேற்கொண்டு குடமுழுக்கு நடத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயம்தோறும் அன்னமிட்டு, உலகத் தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் குடிகொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டியம் வட்டம், திருநாராயணபுரம் கிராமத்தில் அமைந்துள்ள*

[2017 மார்ச் 22

அருள்மிகு ஸ்ரீவேதநாராயண பெருமாள் திருக்கோயில், ஸ்ரீரங்கம் ரெங்கநாத பெருமாள் திருக்கோயிலுக்கு முற்பட்ட கோயிலாகும். 4 வேதங்களையும் தலையணையாக வைத்துக்கொண்டு ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்டுள்ளார். இப்பெருமாள் கோயில் கல்விக்கு மிகப் பிரசித்தி பெற்ற கோயிலாகும். இக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடைபெற்று 17 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. எனவே, இக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்த அரசு ஆவன செய்யும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு) *நன்றி சொல்லிவிட்டார், சரி.*

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்) *உட்காருங்கள், உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *இல்லை, இல்லை.* (குறுக்கீடுகள்) *உட்காருங்கள், நான் சொல்கிறேன்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சேலம் மாணவர் திரு. முத்துகிருஷ்ணன் மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. சேலத்தைச் சேர்ந்த புதுடில்லி பல்கலைக்கழக மாணவர் திரு. முத்துகிருஷ்ணன் மரணம் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் ஆகியோர் பேரவை விதி 55–ன்கீழ்*